# 4 உலகப் படைப்பு



படம் 4.1 - படைப்பு

கடவுளே உலகின் படைப்பாளியாவார். இறைவன் எம்மீது கொண்டுள்ள அளவில்லா அன்பினால் இவ் வியப்புக்குரியதும் பல்வேறு வகையானதுமான படைப்பை எமக்குத் தந்துள்ளார். எனவே நாம் இறைவனின் இந்தப் படைப்பை அன்பு செய்வோமாக.

கடவுள் தமது வார்த்தையின் வல்லமையினால் உலகினைப் படைத்த விதத்தினை திருவிவிலியத்தின் தொடக்க நூலில் காணலாம். இத்திருவிவிலியப் பகுதியை வாசிப்போம்.

## பகலும் இரவும்

''மண்ணுலகு உருவற்று வெறுமையாக இருந்தது. ஆழத்தின் மீது இருள் பரவியிருந்தது. நீர்த்திரளின் மேல் கடவுளின் ஆவி அசைந்தாடிக் கொண்டிருந்தது. அப்பொழுது கடவுள் **'ஒளி தோன்றுக'** என்றார் ஒளி தோன்றிற்று. கடவுள் ஒளி நல்லது என்று கண்டார். கடவுள் ஒளியையும் இருளையும் வெவ்வேறாகப் பிரித்தார். கடவுள் ஒளிக்குப் **'பகல்'** என்றும் இருளுக்கு **'இரவு'** என்றும் பெயரிட்டார். ...... முதல் நாள் முடிந்தது.''

(தொ.நூ 1: 2-5)

## வானமும் நீரும்

அப்பொழுது கடவுள், "நீர்த்திரளுக்கு இடையில், வானம் தோன்றுக! அது நீரினின்று நீரைப் பிரிக்கட்டும்" என்றார். கடவுள் வானத்தை உருவாக்கி வானத்திற்குக் கீழுள்ள நீரையும் வானத்திற்கு மேலுள்ள நீரையும் பிரித்தார். அது அவ்வாறே ஆயிற்று. கடவுள் வானத்திற்கு 'விண்ணுலகம்' என்று பெயரிட்டார். ............. இரண்டாம் நாள் முடிந்தது. (தொ. நூ 1:6-8)

## நிலமும் மரம் செடிகளும்

அப்பொழுது கடவுள் "விண்ணுலகுக்குக் கீழுள்ள நீர் எல்லாம் ஓரிடத்தில் ஒன்று சேர உலர்ந்த தரை தோன்றுக!" என்றார். அது அவ்வாறே ஆயிற்று. கடவுள் உலர்ந்த தரைக்கு 'நிலம்' என்றும் ஒன்று திரண்ட நீருக்குக் 'கடல்' என்றும் பெயரிட்டார். கடவுள் அது நல்லது என்று கண்டார். அப்பொழுது கடவுள் "புற் பூண்டுகளையும் விதை தரும் செடிகளையும் கனி தரும் பழ மரங்களையும் அந்தந்த இடத்தின் படியே நிலம் விளைவிக்கட்டும்" என்றார். அது அவ்வாறே ஆயிற்று. புற் பூண்டுகளையும் விதையைப் பிறப்பிக்கும் செடிகளையும் கனி தரும் மரங்களையும் அந்தந்த இனத்தின்படி நிலம் விளைவித்தது...... மூன்றாம் நாள் முடிந்தது.

(தொ.நூ 1 : 9-13)

## சூரியன், சந்திரன், விண்மீன்

கடவுள் இரு பெரும் ஒளிப்பிழம்புகளை உரு வாக்கினார். பகலை ஆள் வதற்குப் பெரிய ஒளிப் பிழம்பையும், இரவை ஆள்வதற்குச் சிறிய ஒளிப்பிழம்பையும் மற் றும் விண்மீன்களையும் அவர் உருவாக்கினார் கட வுள் மண்ணுலகத்திற்கு ஒளிதர விண் உலக வானத்தில் அவற்றை அமைத்தார்; பகலையும் இரவையும் ஆள்வதற்கும் ஒளியையும் இருளையும் வெவ்வேறாகப் பிரிப் பதற்கும் அவற்றை அமைத் தார்....... நான்காம் நாள் முடிந்தது.

(தொ.நூ 1 : 16-19)

### பறவைகளும் மீன்களும்

இவ்வாறு, கடலின் பெரும் பாம்புகளையும் திரள் திரளாக நீரில் நீந்தி வாழும் உயிரினங்களையும் அவற்றின் இனத்தின்படி கடவுள் படைத்தார்...... கடவுள் அவற்றிற்கு ஆசி வழங்கி "பலுகிப் பெருகி கடல் நீரை நிரப்புங்கள். பறவைகளும் மண்ணுலகில் பெருகட்டும்" என்றுரைத்தார்....... ஐந்தாம் நாள் முடிந்தது.

(தொ.நூ 1:21-23)

### விலங்குகளும் மனிதனும்

அப்பொழுது கடவுள் "கால் நடைகள், ஊர்வன, காட்டு விலங்குகள் ஆகியவற்றை அவற்றின் இனத்தின்படி நிலம் தோற்றுவிப்பதாக" என்றார். கடவுள் காட்டு விலங்குகளையும் கால் நடைகளையும் நிலத்தில் ஊர்வன யாவற்றையும் அவற்றின் இனத்தின்படி உருவாக்கினார்..... அப்பொழுது கடவுள், மானிடரை நம் உருவிலும், நம் சாயலிலும் உண்டாக்குவோம்..... ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார்....... ஆறாம் நாள் முடிந்தது.

(தொ.நூ 1:24-27)

மேற்கூறப்பட்டுள்ள திருவிவிலியத்தின் தொடக்கநூலின் இப்பகுதியிலிருந்து இறைவன் ஆறு நாட்களில் உலகினைபடைத்துள்ளார் என்பதை நாம் அறிந்து கொள்ளலாம். இவை யாவும் இறைவனின் படைப்பு என்பதை திருவிவிலியத்தில் உள்ள திருப்பாடல் 104 எமக்கு விளக்கமாகக் கூறுகிறது.

கடவுள் முழு உலகையும் படைக்கும்பொழுது மனிதனின் தேவைகள் அனைத்தையும் கருத்திற் கொண்டுள்ளார். ஆகவே மனிதனின் அன்றாட வாழ்வுக்குத் தேவையான அனைத்தையும் படைத்துள்ளார். மனிதன் வாழக்கூடிய சூழலையும் கொடுத்துள்ளார்.

இறைவனின் உன்னத படைப்பாகிய நாம் எப்பொழுதும் இறைவனின் இப் படைப்பினை மதிப்பதற்கு உறுதிகொள்வோமாக.இவ் உன்னதமான உலகினைப் படைத்து, எமக்களித்துள்ள இறைவனுக்கு நன்றியும் புகழும் கூறிப் போற்றுவோமாக.

**செயற்பாடு**

① கீழ்க் காணப்படும் அட்டவணையை நிரப்புக.

| நாள் | படைப்பு |
|---|---|
| 1 வது நாள் | |
| 2 வது நாள் | |
| 3 வது நாள் | |
| 4 வது நாள் | |
| 5 வது நாள் | |
| 6 வது நாள் | |

② கடவுள் மனிதனை எத்தனையாவது நாளில் படைத்தார்?

③ இறைவனது படைப்பைப் பற்றி நீங்கள் அறிந்த பாடலொன்றை எழுதுங்கள்.

④ கீழே காணப்படும் படத்தைப் பாருங்கள். இவ்வாறான இறைவனின் படைப்பு எவ்வளவு மதிப்புக்குரியதாகும். திருப்பாடல் 104 : 8-13 பகுதியினை வாசித்து இறைவனின் வியத்தகு படைப்பிற்கு மதிப்பளித்து ஒரு கவிதையை ஆக்குங்கள்.



படம் 4.2 - படைப்பு

⑤ திருப்பாடல் 104 இல் 14-18 வசனங்களையும் 33-34 வசனங்களையும் வாசித்து, அவற்றிலுள்ள கருத்துக்களுக்கேற்ப மனிதனுக்குத் தேவையான சூழலை உருவாக்கிக் கொடுத்த இறைதந்தைக்கு நன்றி கூறிச் செபம் ஒன்று எழுதுங்கள்.

⑥ திருப்பாடல்கள் 104 இல் 19-30 வசனங்களை நன்றாக வாசித்து அதிலுள்ள கருத்துக்களை சித்திரமாக வரையுங்கள்.



***வாழ்க்கைக்கு..........***

★ *இறைவனின் படைப்பை மதிப்போம்.*

★ *விலங்குகளையும் மரம், செடி, கொடிகளையும் அன்பு செய்வோம்.*

★ *வீட்டையும் பாடசாலையையும் அழகுமிக்கதாகப் பேணுவோம்*

★ *இறைவனின் படைப்பை வியந்து இறைதந்தைக்கு நன்றியும் புகழும் கூறுவோம்.*